## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

**1.** இரண்டாவது **Micro Missions of National Police Mission (NPM)** தேசிய மாநாடு நடந்த இடம் எது?

**A]** புனே

**B]** ஹைதராபாத்

**C]** பெங்களூரு

**D]** நியூ டெல்லி

- ✓ பிப். 7, 2019 அன்று நியூ டெல்லியில் 2 வது **Micro Missions of National Police Mission (NPM)** மாநாடு துவங்கியது. இது **Bureau of Police Research & Development (BPR&D]** ஆல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- ✓ இரண்டு நாள் மாநாட்டில், அடிமட்டத்தில் உள்ள திறன்கள் மற்றும் சிக்கல்கள், போலீஸ் நிலையிலுள்ள மாற்றங்கள், பாலின உணர்வுகள், தொழில்நுட்பம் மற்றும் சமூகக்காவலை மேம்படுத்துதல் ஆகியன பற்றி விவாதிக்க உள்ளனர். மிஷன் மூலம் உருவாக்கப்பட்ட திட்டங்களில் **NPM** தொகுப்பின் ஒரு மெகா டி பதிப்பு வெளியிடப்படும்.
- ✓ மைக்ரோ மிஷன்களில் அவர்களின் பங்களிப்புக்காகவும், செயல்படுத்தப்படக்கூடிய திட்டங்களின் வெற்றிகரமாக தயாரிப்புக்காகவும் 09 அதிகாரிகளுக்கு **NPM** விருதுகள் வழங்கப்படும்.
- ✓ **BPRD**ன் **NPM** பிரிவு நாட்டின் பாதுகாப்பு படைகளை உள்நாட்டு பாதுகாப்பிற்கு ஒரு பயனுள்ள கருவியாக மாற்றும் முயற்சியாகும்.
- ✓ **NPM** இன் கட்டளைக்கு, 8 மைக்ரோ மிஷன்கள் **BPRD** இன் கீழ் வேலை செய்கின்றன. **BPRD** ஆண்டுதோறும் தேசிய போலீஸ் மிஷன் மாநாடு நடத்துகிறது.

**2. Rashtriya Kamdhenu Aayog (RKA]** எதற்காக அமைக்கப்படுகிறது?

**A]** பசுக்களை பேணுதல்

**B]** பசுக்கள் பாதுகாப்பு

**C]** மாடுகள் கால்வழிமரபு

**D]** மேற்கண்ட அனைத்தும்

- ✓ பசுக்கள் மற்றும் அவற்றின் சந்ததிகளின் வளங்காப்பு, பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்காக **Rashtriya Kamdhenu Aayog(RKA)** திட்டத்தை மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. இது உள்நாட்டு மாட்டினங்களின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு உட்பட நாட்டில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரிக்க வழிவகுக்கும்.
- ✓ இது கால்நடை வளர்ப்புத் துறையின் வளர்ச்சியையும் உள்ளடக்கும். மேலும் பெண்கள்,சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் நன்மை பயக்கும். **RKA** கால்நடை, விலங்கு அறிவியல் அல்லது வேளாண்மை பல்கலைக்கழகம் அல்லது மாடு, கரிம எரு, உயிரியல், முதலியனவற்றின் வளர்ப்பு துறையில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள மத்திய அல்லது மாநில துறைகள் அல்லது நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும்.
- ✓ ராஸ்த்ரிய காமதேனு ஆயோக் **(RKA)** பிப்.1 ஆம் தேதி 2019-20க்கான ஆண்டு பஜ்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.

**3.** இந்தியாவில் ஆடை நுகர்வை ஆய்வு செய்ய மத்திய அரசு எந்த திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது?

[A] இந்தியா ஆடை - **India Apparel**

[B] இந்தியா அளவு - **India Size**

[C] இந்தியா வேடம் - **India Attire**

[D] இந்தியா அலங்காரம் - **India Outfit**

- ✓ சமீபத்தில் ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிரிதி இராணி மும்பையில், **India Size** திட்டத்தை தொடங்கிவைத்தார். இவ்வகையான இந்திய வரலாற்றில் முதல் முறையாக கொண்டுவரப்படும் திட்டமாகும். அமெரிக்கா,யுனைட்டட் கிங்க்டம், மெக்ஸிகோ போன்ற நாடுகளின் தரத்துக்கு சமமான வரிசையில், ரெடிமேட் ஆடை தொழிலில் ஒரு நிலையான உற்பத்தியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இந்திய நுகர்வோர் அளவீடுகளுக்கு ஏற்ப ஒரு அளவு விளக்கப்படம் உருவாக்கப்படும். இத்திட்டம் ஜவுளித்துறை அமைச்சகத்தால் இந்தியாவின் ஆடை உற்பத்தியாளர்கள் சங்கம்(**CMAI**) உடன் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது.மேலும் அமைச்சர் இந்தியாவின் ஆடை நுகர்வு பற்றி ஒரு ஆய்வினை வெளிட்டார்.
- ✓ இந்த ஆய்வின் அறிக்கை, ஜூலை 2019 இல் வெளியீட்டிற்கு தயாராகும்.

- ✓ இந்த திட்டத்தின் கீழ், சராசரியாக இந்திய ஆடை நுகர்வோர் அளவீடுகளின் மானிடவியல் ஆய்வு இந்தியா முழுவதும் மேற்கொள்ளப்படும்.
- ✓ இந்த ஆய்வு மும்பை, டெல்லி, சென்னை, ஹைதராபாத், கொல்கத்தா மற்றும் ஷில்லாங் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் பல்வேறுபட்ட வயதுடைய சுமார் 25,000 நுகர்வோர்களிடம் நடத்தப்பட உள்ளது. இந்த நாட்டின் அனைத்து முக்கிய பகுதிகளையும் அறிந்து கொள்ள இந்து ஆய்வு உதவும்.

4. சமீபத்தில் **NATO** உடன்படிக்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடு எது?

**[A]** ரோமானியா

**[B]** குரோஷியா

**[C]** மாசிடோனியா

**[D]** கொசோவா

- ✓ பிப். 6ம் தேதி, அமெரிக்கா தலைமையிலான **NATO** கூட்டணியின் 30 வது உறுப்பினராக சேருவதற்கான உடன்படிக்கை ஒப்பந்தத்தில் மாசிடோனியா கையெழுத்திட்டது. நுழைவுத் தகுதிகளை சந்திக்கும் அனைத்து ஐரோப்பிய நாடுகளும் பிராந்திய கூட்டணியில் சேரலாம் என ஒரு புதிய உறுப்பினரின் நுழைவு சுட்டிக்காட்டியது. இருப்பினும், மாஸ்கோ தொடர்ந்து **NATO**வின் நிலைப்பாட்டை தொடர்ந்து எதிர்த்தது. பால்கன் உறுப்பினர்களை கொண்டுவருவதன் மூலம், இந்த பிராந்தியத்தின் பாதுகாப்பு குறைமதிப்பிற்கு உட்படுவதாக குற்றம் சாட்டியது. மாசிடோனியா-**NATO** ஒப்பந்தம் கிரீஸுடனான ஒரு உடன்படிக்கையை பின்பற்றுகிறது. இதன்மூலம் மாசிடோனியாவின் பெயரைப் பற்றிய 27 ஆண்டுகால சர்ச்சை முடிவடைகிறது.
- ✓ உடன்படிக்கை இப்போது உறுப்பினர் நாடுகளின் அரசாங்கங்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மாசிடோனியா மற்றும் **NATO** அங்கத்தவர் கிரேக்கத்திற்கும் இடையிலான ஒப்பந்தத்தின்படி மாசிடோனியா அதன் பெயரை வடக்கு மசடோனியா குடியரசு என மாற்ற ஒப்புக்கொண்டது.

5. 462 வது கந்தூரி திருவிழா 2019 எந்த மாநிலத்தில் கொண்டாடப்பட்டது?

**[A]** தமிழ்நாடு

**[B]** ஆந்திரப் பிரதேசம்

**[C]** கேரளா

**[D]** கர்நாடகம்

- ✓ தமிழ்நாட்டில், நாகூரில் உள்ள புகழ்பெற்ற முஸ்லீம் யாத்ரீக மையமான நாகூர் தர்காவில், 462 வது ஆண்டு கந்தூரி திருவிழா 2019 துவங்கியது.
- ✓ பிப். 6ஆம் தேதி புனிதக்கொடியானது ஊர்வலத்தில் கொண்டுவரப்பட்டு 14 நாள் திருவிழா கொண்டாட்டம் கொடியேற்றத்துடன் தொடங்கியது. கந்தூரி திருவிழா 16ஆம் நூற்றாண்டின் புனிதமான ஹஸ்ரத் சையது சாஹுல் ஹமீத் குவாடிர் வாலியின் இறந்ததினத்தை நினைவுகூரும் வகையில் நடைபெறுகிறது. அவர் உத்திரப்பிரதேசத்தின் அலகாபத்தில் உள்ள மானிக்பூரிலிருந்து நாகூருக்கு இடம்பெயர்ந்து தனது வாழ்நாளை இங்கு கழித்தார். பாரம்பரியத்தின் படி,ஐந்து கொடிகளில் ஒரு கொடி சிங்கப்பூரிலிருந்து கொண்டுவரப்பட்டதாகும்.
- ✓ விழாவின் முக்கிய நிகழ்வான சந்தனக்கூத்து பிப்.15ல் நடைபெற உள்ளது. நாகூரில் செயிண்ட் ஷாபுல் ஹமீது தர்கா 500 ஆண்டுகளுக்கு மேல் இயங்கி வருகிறது.
- ✓ 16 ஆம் நூற்றாண்டில் தஞ்சாவூர் வந்திருந்த செயின்ட் ஹர்ஷத் சையது சாகுல் ஹமீது, அப்போதைய தஞ்சாவூரின் மன்னரான அச்சுதாப்பா நாயக்கரின் நோயை குணப்படுத்தினார். அதற்கு அந்த மன்னர் நாகூரில் உள்ள புனித நிலங்களை பரிசாக வழங்கினார். நாகூரில் செயின்ட் தனது வாழ்நாள் முழுவதிலும் சாதி,மதம் அல்லது சமய வேறுபாடின்றி அனைத்து மனிதர்களுக்கும் உதவி செய்து வாழ்க்கையை கழித்தார்.

**6.** ரிசர்வ் வங்கியின் 6 வது இரு-மாத நிதிக்கொள்கை அறிக்கையின் படி நடப்பு ரெப்போ விகிதம் என்ன?

**[A] 6.0%**

**[B] 6.75%**

**[C] 6.50%**

**[D] 6.25%**

- ✓ ரிசர்வ் வங்கி கவர்னர் ஷக்திகாந்த தாஸ் தலைமையில், ஆறு உறுப்பினர்கள் கொண்ட நிதிக்கொள்கை குழு (**MPC), 2018-19**ஆம் ஆண்டின் 6வது இருமாத நிதிக்கொள்கையை அறிவித்தது. அதில் ரெப்போ விகிதமானது **Liquidity Adjustment Facility(LAF)** மூலம் 25 அடிப்படை புள்ளிகள் குறைக்கப்பட்டு 6.50% லிருந்து 6.25% ஆக உள்ளது.
- ✓ இதைத்தொடர்ந்து, தலைகீழ் ரெப்போ விகிதம் 6.0% ஆகவும் சரிசெய்யப்பட்டுள்ளது. **Marginal Standing Facility(MSF)** விகிதம் மற்றும் வங்கி விகிதம் 6.5% ஆக சரிசெய்யப்பட்டுள்ளது. **MPC** தனது

இறுக்கமடைந்த பணவியல் கொள்கை நிலைப்பாட்டிலிருந்து நடுநிலை கட்டுப்பாட்டுடன் செயல்பட முடிவு செய்துள்ளது. நுகர்வோர் விலை குறியீட்டெண்(**CPI)** பணவீக்கம் 4 சதவீதமாக +/-2 ஏற்ற இறக்கத்துடன் நடுத்தர கால இலக்கை அடைவதற்கான நோக்கத்துடன் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. மேலும் 2020 நிதியாண்டிற்கான பொருளாதார வளர்ச்சி விகிதம் 7.4% ஆகவும் கணித்துள்ளது. மத்திய புள்ளியியல் அலுவலகம்(**CSO)** மூலம் நடப்பு நிதியாண்டிலற்கான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை 7.2 சதவீதமாக மதிப்பிட்டிருந்தது.

✓ ரிசர்வ் வங்கியின் கவர்னர் ஷக்திகந்த தாஸ் நியமனத்திற்க்கு பின்னும், இடைக்கால பட்ஜெட் தாக்கலுக்கு பின்னும் நடக்கும் முதல் நிக்கொள்கை ஆய்வு இதுவாகும்.**MPC** இன் அடுத்த கூட்டம் ஏப்ரல் 2 முதல் 4 வரை திட்டமிடப்பட்டுள்ளது.

**7. 'Parmanu Tech 2019'** நடந்த இடம் எது?

**[A]** கான்பூர்

**[B]** நியூ டெல்லி

**[C]** உதய்பூர்

**[D]** டேராடூன்

✓ பிப். 6ம் தேதி நியூ டெல்லியில் வெளிவிவகாரத்துறை அமைச்சகம் மற்றும் அணுசக்தித்துறை (**DAE)** ஆகியவற்றால் **Parmanu Tech 2019'** மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

✓ மாநாட்டில் அணுசக்தி மற்றும் கதிர்வீச்சு தொழில்நுட்பங்கள் தொடர்பான பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டது. அணுசக்தி மற்றும் விண்வெளி விவகாரங்களுக்கான மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் மாநாட்டில் முக்கிய உரையாற்றினார். மாநாட்டின் குறிப்பிட்ட அமர்வுகளில் பின்வரும் தலைப்புகளின் கீழ் குழு விவாதங்கள் நடைபெற்றன.

**1) Health care: Nuclear Medicine and Radiation therapy – Care to cure,**

**2) Food Preservation, Agricultural & Industrial Applications: From farms to factories - Serving the National Cause** மற்றும்

**3) Showcasing India's capabilities in Nuclear Energy: Energy Security with environmental responsibility – the Onward March.**

8. ஜீரோ பாட்டாலிட்டி காரிடார் [ZFC] ஐ துவங்கிய மாநில அரசு எது?

[A] பஞ்சாப்

[B] அசாம்

[C] டெல்லி

[D] ஒடிசா

✓ அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான நியூ டெல்லி அரசு சமீபத்தில் டெல்லியின் ரிங்ரோடு வெளிப்புறத்தில் அமைந்துள்ள புராரி சௌக் மற்றும் பால்ஸ்வா சௌக் இடையில் நடக்கும் விபத்துக்கள் மற்றும் அதற்க்கான காரணங்களை ஆராய்வதற்காக **'Zero Fatality Corridor'(ZFC]** தொடங்கியது.

✓ பைலட் திட்டத்தின் நோக்கம் இந்த குறிப்பிட்ட நீளத்தில் நடக்கும் மரணங்களை குறைப்பதாகும். இந்த திட்டத்தின்படி, ஒரு புறம் பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஒட்டவீரர்கள் சம்பந்தப்பட்ட மோதல்களுக்கும், மறுபுறம் கார்கள் மற்றும் கனரக வாகனங்கள் ஈடுபடும் மோதல்களுக்கும் அறிவியல் ஆய்வுகள் நடத்தப்படும்.

✓ இந்த ஆய்வு **SaveLIFE** அறக்கட்டளையுடன் இணைந்து நடத்தப்படும். **SaveLIFE** அறக்கட்டளை சாலை பாதுகாப்புக்காக இயங்கிவரும் இலாப நோக்கமற்ற அமைப்பாகும்.

9. எந்த நாடு சியாமீஸ் சண்டை மீன்களை அதன் தேசிய நீர்வாழ் உயிரினம் என அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது?

[A] தாய்லாந்து

[B] இந்தோனேஷியா

[C] வியட்நாம்

[D] மலேசியா

✓ தாய்லாந்து நாடு சியாமீஸ் சண்டை மீன்களை அதன் தேசிய நீர்வாழ் உயிரினமாக அறிவித்துள்ளது. இது வளங்காப்பு முயற்சிகள் மற்றும் வர்த்தக இனப்பெருக்கம் ஆகியவற்றை அதிகரிக்க பயன்படும்.

- ✓ மேற்கில் பீட்டா மீன் என அறியப்படுகிறது. நீருக்கடியில் அதன் வண்ணங்களை மாற்றும் உடல் அமைப்புக்கும், பன்னிறம் கொண்ட வாலுக்காகவும் செயற்கை நீர்நிலையங்களில் இந்த மீன் பிரபலமாக உள்ளது. இது 1939 ஆம் ஆண்டில் தாய்லாந்தில் சியாம் என பெயரிடப்பட்ட இதன் பழைய தலைமுறைகளின் நினைவுகளை கொண்டு வருகிறது.
- ✓ குழந்தைபருவ விளையாட்டுகளில் மீன் விற்பனை செய்யப்பட்டு, விளையாட்டுக்கு பயன்படுத்தப்பட்டன. சியாமீஸ் சண்டை மீன் **IUCN** ஆல் ஆபத்தான இனமாக பட்டியலிடப்பட்டுள்ளது.
- ✓ தாய்லாந்தின் அதிகாரப்பூர்வ தேசிய விலங்கு யானை ஆகும்.

10. அருணாச்சல பிரதேசத்தின் எந்த வகை பழங்குடியினரால் 52 வது பூரி பூட் யோலோ பண்டிகை கொண்டாடப்பட்டது?

**[A]** சிங்போ

**[B]** மிஷ்மி

**[C]** நியிஷி

**[D]** அபத்தனி

- ✓ அருணாச்சல பிரதேசத்தின் நியிஷி பழங்குடியினரால் சமீபத்தில் 52 வது பூரி பூட் யோலோ திருவிழா கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மாதத்தில், வசந்த காலத்தையும், வெற்றிகரமான அறுவடையையும் வரவேற்பதற்காக இந்த விழா நடத்தப்படுகிறது. இந்த திருவிழாவின் போது, புனிதமான ஆவியானவர் மக்களை பரிசுத்தப்படுத்தும்படி அழைக்கப்படுவார்.
- ✓ இது தவிர, எந்த ஒரு அபாயகரமான நோய்களின் சாத்தியத்தை அதாவது மரண நோய்களை அகற்றும் செழிப்புக்கான வெகுஜன பிரார்த்தனை இதுவாகும். இங்கே முக்கியமான அம்சம் என்னவென்றால் சாதி,சமயம்,வயது மற்றும் பாலியல் தடைகளை கடந்து மக்கள் தரும் பெரும் ஆதரவே ஆகும். இளைஞர்கள் இப்பண்டிகையை முன்னெடுப்பதற்கு, சடங்குகளை நிகழ்த்தும் நிபு (பூசாரி) களின் வழிநடத்தையாகும்.
- ✓ இந்த விழாவில் சூரிய ஒளி, கிரகங்கள், மகத்தான ஆறுகள், தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பற்றி பேசும் ஒரு கீதம் உள்ளது. சூரியனை சுற்றும் மற்ற கோள்களுடன் இணைந்து சுழன்று கொண்டிருக்கும் பூமியை பற்றிய வரிகளும் இந்த கீதத்தில் இடம் பெற்றுள்ளது.